දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary: 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846
ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk
ඔබේ අංකය / உமது இல. / Your No. ........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය" බත්තරමුල්ල.
"இசுருபாய" பத்தரமுல்ல.
"Isurupaya" Battaramulla.
මගේ අංකය / எமது இல. / My No. ඊඩී /15/02/53/03/111 වෙළම
දිනය / திகதி / Date 2017.11.

சுற்றுநிருப இல- 43/2017

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
உயர்தர தொழிற் பாடத்துறை அமுலாக்கம் செய்யப்படுகின்ற முன்னோடி செயற் திட்டத்தின் முதலாவது வகுதி பாடசாலைகளின் அதிபர்கள்.

**13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் உயர்தர தொழிற் பாடத்துறையை அமுலாக்கம் செய்கின்ற பாடசாலைகளுக்காக வழங்கப்படுகின்ற பாடசாலை மட்ட நிதி வழங்கலை பயன் தரும் வகையில் கையாளுதல்.**

## 1. அறிமுகம்

13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டம் அமுலாக்கப்படுகின்ற பாடசாலைகளுக்காக கல்வி அமைச்சினால் பாடசாலை மட்டத்திலான நிதி வழங்கல்களை கட்டம் கட்டமாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் படி முன்னோடி வேலைத்திட்டதில், ஒரு பாடசாலைக்கு குறைந்த பட்சம் ரூ.500,000.00 முதலாவது நிதி வழங்கலின் இறுதி கொடுப்பனவாக (Outright Grant) வழங்கப்படும். இந்த நிதி வழங்கல் பாடசாலையின் பாடசாலை அபிவிருத்தி கணக்கில் வைப்புச் செய்யப்படும். இந்த நிதி வழங்கலை உரிய சுற்றுநிருபத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக 2017.11.01 ஆம் திகதியில் இருந்து 2018.03.31 ஆம் திகதி வரை அதிக வினைத்திறனுடனும், பலனுள்ள வகையிலும் பாடசாலையின் உயர்தர தொழிற் பாடத்துறையை நடைமுறைப்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்துவது உரிய பாடசாலை அதிபரின் பொறுப்பகும்.

இந்த வழங்கலுக்குரிய அனைத்து மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் கல்வி அமைச்சினதும், மாகாண கல்வித் திணைக்களங்களினதும், வலயக் கல்வி அலுவலகங்களினதும் மற்றும் கோட்டக் கல்வி அலுவலகங்களினதும் உத்தியோகத்தர்களால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 2. நிதி வழங்கலின் நோக்கம்

உயர்தர தொழிற் பாடத்துறையை திறமையாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான செயற்பாடுகளை பாடசாலை மட்டத்தில் நிறைவேற்றுவதற்குரிய தீர்மானங்களை எடுக்கும் வகையில் பாடசாலையை பலப்படுத்துவது இதன் அடிப்படை நோக்கமாகும்.

அத்துடன் இந்த பாடத்துறைக்குரிய பாடங்கள், இணைப்பாடவிதான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது மற்றும் அபிவிருத்தி, செயன்முறைப் பயிற்சிகள் தொடர்பாக பௌதீக மற்றும் மானிட வளங்களினை விளைத்திறனுடனும் வினைத்திறன் மிக்கதாகவும் பாவனைக்கு எடுப்பதற்கு பாடசாலைக்கு ஒத்துழைப்பு வழங்குவதும் இந்த வழங்கலின் குறிக்கோளாகும்.

## 3. பாடசாலைக்கான நிதி வழங்கலை பயனுள்ள வகையில் முதலீடு செய்தல்

இந்த நிதி வழங்கலை செலவிடும் போது கல்வி அமைச்சின் சுற்றுநிருப இலக்கம் 07/2013, கொண்ட பாடசாலை மட்டத்திலான பண்பு ரீதியான அளவு ரீதியான மற்றும் கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பான திட்டமிடல் மற்றும் பொருட் கொள்வனவு தொடர்பான சுற்று நிருபம் மற்றும் வழிகாட்டல் கையேட்டில் காட்டப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களை உரிய முறையில் பின்பற்றல் வேண்டும்.

தொழிற் பாடத்துறைக்குரிய பின்வரும் செயற்பாடுகள் தொடர்பாக இந்த பாடசாலை மட்டத்திலான நிதி வழங்கலை பாவிப்பதற்கு உரிய பாடசாலைகளின் அதிபர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும்.

(அ) தொழிற் பாடத்துறைக்குரிய சகல செயற்பாடுகள், செயன்முறைப் பயிற்சிகள், பாடசாலை நேரத்தின் பின்பு மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

(ஆ) உதவி கற்கைப் பொருட்கள், செயன்முறைப் பயிற்சிக்குத் தேவையான உபகரணங்கள், பொருட்கள் கொள்வனவு மற்றும் பராமரிப்பு, செயன்முறைப் பயிற்சிக்குத் தேவையான இட வசதிகளை ஒழுங்குப்படுத்தல்

(இ) ஏனைய நிறுவனங்களினது செயன்முறைப் பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள், ஆலோசனை மற்றும் வளவாளர் சேவையினைப் பெற்றுக் கொள்ளல்

(ஈ) பாடசாலை மட்டத்திலான கொள்ளளவு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

(உ) பாடத்துறைக்குரிய இணைப்பாடவிதான செயற்பாடுகள், துறைசார் கல்வி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

(ஊ) முன்னோடி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் காலங்களில் கணினி மற்றும் ஏனைய உபகரணங்களின் பராமரிப்பு, மின் கட்டணம் மற்றும் இணையத்தள கட்டணம் செலுத்துதல்.

## 4. பாடசாலை மட்டத்திலான நிதிவழங்கலின் மூலம் பயன்படுத்த முடியாத விடயங்கள்

தொழிற் பாடத்துறைக்கு உரித்தாகாத பின்வரும் பொருட்கள் தொடர்பாக பாடசாலை அடிப்படையிலான நிதி வழங்கலை பயன்படுத்த முடியாது.

(i) தொலைபேசிக் கட்டணம் செலுத்துதல் (ii) நீர் கட்டணம் செலுத்துதல்

(iii) பாதுகாப்புச் சேவைகளுக்கான கட்டணம் செலுத்துதல்

(iv) புதிய கட்டங்களை அமைத்தல்

(v) வாகனங்களை கொள்வனவு செய்தல், பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல்

(vi) நேரடியான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துதல்

(vii) நினைவுச் சின்னங்கள்/ நினைவுப் பலகைகள் /கௌரவ சின்னங்கள்/அழைப்பிதழ்கள் அச்சிடல் / விழாக்களுக்கான சிற்றுண்டிச் செலவுகள்

## 5. பாடசாலை மட்டத்திலான திட்டங்களை வகுத்தல் மற்றும் அனுமதி பெறல்

தொழிற் பாடத்துறையில் ஈடுபடும் மாணவர் எண்ணிக்கை மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் தொழிற் பாடங்களுக்கு அமைவாக இந்த சுற்றறிக்கையுடன் இணைத்து அனுப்பப்பட்ட மாதிரி 01 க்கு அமைவாக பாடசாலை அதிபரினால் தயாரிக்கப்பட்ட திட்டத்தின், 4 பிரதிகளை வலயக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். வலயக் கல்விப் பணிப்பாளரினால் அவ்வாறு அனுமதிக்கப்பட்ட பிரதியொன்றை மாகாண கல்விப் பணிப்பாளருக்கும், மற்றொரு பிரதியை கல்வி அமைச்சின் செயலாளருக்கும் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். (மாகாண கல்வித் திணைக்களத்தின் 13 வருட உத்தரவாதம் அளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டத்தின் இணைப்பு உத்தியோகத்தர் மற்றும் வலயக் கல்வி அலுவலகத்தின் திட்டமிடல் பி.க.ப./உ.க.ப. ஆகியோரால் இந்த நடடிக்கை ஒருங்கிணைக்கப்பட வேண்டும். மேலும் கல்வி அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்படும் பிரதியை கல்விப் பணிப்பாளர், அனைவருக்கும் கல்விக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

### 6. பாடசாலை பொருட் கொள்முதல் செயற்திட்டம்

மேற்படி 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட 07/2013 சுற்றறிக்கையின் 11 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலை பொருட் கொள்முதல் செயற்திட்டத்தின் நிதி வரையறைகள், 12 ஆம் பந்தியில் காணப்படும் பாடசாலை பொருட் கொள்முதல் செயற்திட்டம் மற்றும் 13 இல் காணப்படும் பொறுப்பேற்றல் மற்றும் புத்தகங்களில் பதிவுசெய்தல், ஆலோசனைகளுக்கு அமைவாக கொள்முதல் செயற்திட்டம் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு செயற்பாடுகளை நிறைவேற்றல் வேண்டும்.

### 7. கணக்குகளைப் பேணுதல்

பற்று லெஜரை பராமரித்தல் மற்றும் மேற்படி 3 ஆம் பந்தியில் காணப்படும் 07/2013 சுற்றறிக்கை இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டிருக்கும் கொடுப்பனவு மற்றும் கணக்கிடுதல் தொடர்பாக தயாரிக்கப்படும் நான்கு மாத கணக்காய்வு அறிக்கையில் இந்த நிதி வழங்கலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவுகளையும் உள்ளடக்கி அந்த அறிக்கையை வலய மற்றும் மாகாண அதிகாரிகளுக்கு முறையாக அனுப்புதல் வேண்டும்.

கல்வி அமைச்சு, மாகாண கல்வித் திணைக்களங்கள் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களின் உத்தியோகத்தர்களினால் இந்த நிதி வழங்கலை முகாமைத்துவம் செய்வது குறித்து காலத்திற்குக் காலம் பாடசாலை அதிபர்களையும் தொழிற் பாடத்துறைக்குப் பொறுப்பான ஆசிரியர்களையும் முறையாக அறிவூட்டல் செய்து சீராக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

### 8. பாடசாலை அடிப்படையிலான நிதி வழங்கல் தொடர்பாக சமர்ப்பிக்க வேண்டிய நிதி முன்னேற்ற மற்றும் கண்காணிப்பு அறிக்கை

பாடசாலை அதிபரினால், இந்த சுற்றறிக்கையுடன் இணைத்து அனுப்பப்பட்ட மாதிரிப்படிவ இலக்கம் 02 ற்கு அமைவாக இந்த நிதி வழங்கலுக்குரிய நிதி மற்றும் பௌதீக முன்னேற்ற அறிக்கை மற்றும் மாதிரி 3 க்கு அமைவாக தயாரிக்கப்பட்ட மாதாந்த கணக்கு பொழிப்பை வலயக் கல்விப் பணிப்பாளருக்கும் மாகாண கல்வித் திணைக்களத்தின் 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டத்தின் இணைப்பு உத்தியோகத்தருக்கும் ஒரு பிரதியினை கல்வி அமைச்சின் "அனைவருக்கும் கல்வி" கிளையின் கல்விப் பணிப்பாளருக்கும் ஒவ்வோரு மாத இறுதியின் அடுத்து வரும் மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும். மேலும் பாடசாலை வழங்கலின் நிதியை செலவிட்ட உடனே அது தொடர்பான தகவல்கள் இந்த தொழிற் பாடத்துறைக்குரிய தரவு முறைமைக்குள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

### 9. கண்காணிப்பு

இந்த நிதி வழங்கலை விளைதிறனுடனும், வினைத்திறனுடனும் பாடசாலைக்குள் முதலீடு செய்தல் மற்றும் அதனூடாக எதிர்பார்க்கப்படும் சிறந்த பலனைப் பெற்றுக் கொள்வதற்கு மேற்படி 3 ஆம் பந்தியில் இலக்கம் 07/2013 ஆம் சுற்றுநிருபத்தின் 15 ஆம் அத்தியாயத்தில் குறிப்பட்டுள்ள கண்காணிப்பு வேலைத் திட்டங்களுக்கு மேலதிகமாக பின்வரும் முறையில் மேலதிக கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதைப் பற்றியும் நீங்கள் கவனிக்க வேண்டும்

| | | |
|---|---|---|
| i | பாடசாலை மட்டம் - | உள்ளக கண்காணிப்பு பாடசாலை அதிபரினால் (பாடசாலை திட்டமிடல்/முகாமைத்துவ குழு மூலமாக) |
| ii | கோட்ட மட்டம் - | கோட்டக் கல்விப் பணிப்பாளரினால் அப்பாடசாலை மேற்பார்வையின் போது |
| iii | வலய மட்டம் - | வலயக் கல்வி அலுவலகங்களின் திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் பாடப் பொறுப்பு பணிப்பாளர்கள், 13 வருட உத்தரவாத கல்வி வேலைத்திட்ட இணைப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் நிதிப் பிரிவு உத்தியோகத்தர்களினால் |
| iv | மாகாண மட்டம் - | மாகாண கல்வித் திணைக்களங்களின் திட்டமிடல், மற்றும் பாடத்துறைக்கு பொறுப்பான பணிப்பாளர்கள், 13 வருட கல்வி வேலைத்திட்டத்தின் இணைப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் நிதிப் பொறுப்பு விடய உத்தியோகத்தர்கள் |
| v | நிரல் அமைச்சு - | 13 வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டத்தின் இணைப்பு உத்தியோகத்தர்கள், கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்கள், கல்வி அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டுப் பிரிவு, தேசிய பாடசாலைப் |

பிரிவு மற்றும் பாடசாலை கட்டட வேலைப் பணிப்பாளர் மற்றும் அப்பிரிவின் உத்தியோகத்தர்கள் மற்றும் நிதிப்பிரிவின் உத்தியோகத்தர்கள்.

## 10. நிதி வழங்கல் கணக்காய்வு

கல்வி அமைச்சு மற்றும் மாகாண மட்டத்திலான கணக்காய்வு உத்தியோகத்தர்கள் இந்த நிதி வழங்கல் பயன்பாடு தொடர்பாக காலத்திற்கு காலம் கண்காணித்து, பாடசாலையை வலுவூட்டுவதற்குத் தேவையான முயற்சியின் வெற்றிக்கு துணை புரிதல் வேண்டும்.

இந்த விசேட நிதி வழங்கல் வசதியினை குறிப்பிட்ட காலத்திற்குள் சிறப்பான விதத்தில் பயன்படுத்தத் தவறும் பட்சத்தில் அது குறித்து பாடசாலை அதிபர்களிடம் இருந்து விளக்கம் கோரப்படலாம்.

## 11. விசேட சந்தர்ப்பங்கள்

இந்த சுற்றுநிருபத்தில் விசேடமாக அறிவுறுத்தல்கள் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போது தற்போது அமுலில் உள்ள நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகளைக் கைக்கொள்ளல் வேண்டும் என்பதை மேலும் அறியத் தருகின்றேன். இந்த சுற்றுநிருபம் தொடர்பாக மேலதிக விளக்கங்கள் அவசியம் என கருதினால் கல்வி அமைச்சின் அனைவருக்கும் கல்விக் கிளையின் தொலைபேசி இலக்கம் 0112787136 உடன் அல்லது நிதிப் பிரிவின் தொலைபேசி இலக்கம் 0112786609 உடன் தொடர்பு கொள்ளலாம்.

13 வருட கல்வி வேலைத்திட்டத்தின் மாகாண இணைப்பு உத்தியோகத்தர்கள் இந்த நிதி வழங்கலை பயன்படுத்தத் தேவையான இணைப்பு நடவடிக்கைகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு தொடர்பாக தமது விசேட கவனத்தைச் செலுத்துதல் அவசியம் என்பதை அறியத்தருகிறேன்.

சுனில் ஹெட்டியாராட்சி
கல்விச் செயலாளர்,
கல்வி அமைச்சு

பிரதிகள் :-

1. கணக்காய்வாளர் நாயகம்
2. செயலாளர், நிதி ஆணைக்குழு
3. மாகாண பிரதம செயலாளர்கள்
4. சகல மேலதிக செயலாளர்கள்
5. பணிப்பாளர் நாயகம், கணக்கு மற்றும் நிதி, கல்வி அமைச்சு
6. பிரதான நிதி உத்தியோகத்தர், கல்வி அமைச்சு
7. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
8. கல்வி அமைச்சின் சகல கல்விப் பணிப்பாளர்கள்
9. பிரதம கணக்காளர், கல்வி அமைச்சு
10. 13 வருட கல்வி வேலைத்திட்டத்தின் மாகாண இணைப்பு உத்தியோகத்தர்கள்
11. பாடசாலை கட்டட பணிப்பாளர், கல்வி அமைச்சு
12. மாகாண பிரதம கணக்காளர்
13. மாகாண பிரதம பொறியியலாளர்

இணைப்பு 1

பதின்மூன்று வருட உறுதிப்படுத்தப்பட்ட கல்வி வேலைத்திட்டம் - கல்விஅமைச்சு
பரீட்சார்த்த வேலைத்திட்டத்தின் முதற்கட்ட பாடசாலைகளுக்கு பாடசாலைமட்ட நன்கொடை(School Based Grant)வழங்கல்

பாடசலையின் பெயர்:.........................................
வலயம் :.........................................
மாகாணம் :.........................................

| தொடர் இலக்கம் | செயற்பாடுகள் | நோக்கங்கள் |
|---|---|---|
| 1 | | 1.1...................................<br>1.2...................................<br>1.3................................... |
| 2 | | 2.1...................................<br>2.2...................................<br>2.3................................... |

| தொடர் இலக்கம் | துறை இலக்கம் | செயற்பாடுகள் | காலச் சட்டகம் | மதிப்பீட்டுநித ரூபா | எதிர்பார்க்கப்படும் வெளியீடு(Output) | எதிர்பார்க்கப்படும் பெறுபேறு(Outcomes) | நடைமுறைப்படுத்தும் பொறுப்பு | ஏனைய குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

புாடசாலை அபிவிருத்திச்சங்க கணக்கு இலக்கம்:- ......................................... வங்கி: ......................................... கிளை: .........................................
மேற்படி தகவல்கள் மற்றும் விபரங்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன்.

கையொப்பம் :.........................................
அதிபரின் பெயர் :.........................................
திகதி : .........................................
பதவி முத்திரை

அனுமதிக்கிறேன்
வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம்:
பதவி முத்திரை

இணைப்பு – 1 I

13 வருட உறுதிப்படுத்தப்பட்ட கல்வி வேலைத்திட்டம்-கல்வி அமைச்சு

பாடசாலை மட்ட நிதிக் கொடை பற்றிய மேற்பார்வைப் படிவம்.

பாடசாலையின் பெயர் : ....................................

வலயம் : ....................................

மாகாணம் : ....................................

| பா.ம.நி.கொ.கீழ் பெற்ற நிதி ரூபா. | நிதி கிடைத்த திகதி | மேற்கொண்ட செயற்பாடுகள் | செலவு விபரம் ரூபா | ..........திகதிக்கு பௌதிக முன்னேற்றம் | ..............திகதிக்கு நிதி முன்னேற்றம் | வேறு குறிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

மேற்படி விபரங்கள்,தகவல்கள் உண்மையென உறுதிப்படுத்துகின்றேன்

கையொப்பம் : ..............................

அதிபரின் பெயர் : ..............................

திகதி : ..............................

பதவி முத்திரை : ..............................

பிரதிகள் : மாகாண கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வித் திணைக்களம்.

மாகாண இணைப்பாளர், 13 வருட உறுதிப்படுத்தப்பட்ட கல்வி வேலைத்திட்டம்.

வலய கல்விப் பணிப்பணிப்பாளர், வலய கல்வி அலுவலகம்.

மாகாணம் :.................... வலயம் :...........................

பாடசாலை :.....................

இணைப்பு-11 r

13 வருட உறுதிப்படுத்தப்பட்ட கல்வி வேலைத்திட்டம் - கல்வி அமைச்சு

பாடசாலை மட்ட நிதிக்கொடையின் ...................................... மாத கணக்கு சாராம்சம்.

| பாடசாலை மட்ட நிதிக் கொடை கிடைத்த திகதி | பாடசாலை மட்ட நிதிக்கொடையாக கிடைத்த தொகை | ..................மாத ஆரம்ப மொத்த செலவு | ................க்கு மாதந்த செலவு | ....................மாத இறுதிக்கு மொத்த செலவு | மீதிப் பணம் | வேறு தகவல்கள் இருப்பின் குறிப்பிடுக |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

மேற்படி தகவல்கள், விபரங்கள் உண்மையென உறுதிப்படுத்துகின்றேன்.

கையொப்பம் : ...........................
அதிபரின் பெயர் : ...........................
திகதி : ...........................
பதவி முத்திரை : ...........................

பிரதிகள் : மாகாண கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வித் திணைக்களம்.
மாகாண இணைப்பாளர், 13 வருட உறுதிப்படுத்தப்பட்ட கல்வி வேலைத்திட்டம்.
வலய கல்விப் பணிப்பணிப்பாளர், வலய கல்வி அலுவலகம்.